கலைஞர் 100
1924 - 2023

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

சர்வதேச சிறுதானிய ஆண்டு 2023

முனைவர் மா.ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர், தேதி: 17.04.2024
ஆசிரியர்,
ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**நீடித்த கரும்பு சாகுபடியில் கரும்பு தாய் குருத்து வெட்டும் கருவி**

நீடித்த கரும்பு சாகுபடி என்பது கரும்பு சாகுபடியில் கடைபிடிக்கப்படும் ஒரு புதிய தொழில் நுட்பம். ஒரே சீரான, பருமன் மற்றும் அதிக எண்ணிக்கையிலான கரும்பை பெறுவதற்கு கரும்பு நட்ட ஒரு மாதத்திற்குள் கரும்பின் தாய்குருத்தை வெட்டுவது என்பது நீடித்த கரும்பு சாகுபடி முறையில் ஒன்றாகும். நட்ட கரும்பு நாற்றுகள் வேர் ஊன்றிய ஒரு மாதத்திற்குள் 25 மி.மீ க்கு மேல் கரும்பின் தாய் குருத்தை வெட்ட வேண்டும். பொதுவாக நடைமுறையில் கத்தரிக்கோல், கத்தி மற்றும் அரிவாள்களை பயன்படுத்தி தாய்குருத்தினை வெட்டுகின்றனர். இதில் வெட்டும் செயல்திறன் குறைவு. மேலும் உற்பத்தி செலவு மற்றும் பண்ணை தொழிலாளர்களுக்கு ஏற்படும் இன்னல்களும் அதிகம்.

இரும்பு பட்டை, இரும்பு குழாய் (கைப்பிடி) மற்றும் வர்த்தகரீதியாக கிடைக்கும் கத்தரிக்கோலை பயன்படுத்தி கரும்பு தாய்குருத்து வெட்டும் கருவி வடிவமைக்கப்பட்டுள்ளது. இரும்பு பட்டையின் உயரம் 900 மி.மீ மற்றும் 12X 6 மி.மீ அளவினை கொண்டது. கத்தரிக் கோலின் இரண்டு கைப்பிடியிலும் பின்புறத்தில் இருந்து 20 மி.மீ தள்ளி 7 மிமி விட்டம் கொண்ட துளை இடப்பட்டது. இதில் இரு இரும்பு பட்டைகளும் 1 ½ X 1 ¼" அளவு கொண்ட திருகு மறை மற்றும் செருகூசியைக் கொண்டு இணைக்கப்பட்டது. மேலும் இரண்டு இரும்பு பட்டைகளும் கீழிருந்து 350 மிமி தொலைவில் X வடிவில் திருகு மறை மற்றும் செருகூசி உதவியுடன் இணைக்கப்பட்டது. இக்கருவியை இயக்குவதற்கு 160 மி.மீ நீளம் மற்றும் 20 மி.மீ அளவுள்ள இரும்பு குழாய், இரண்டு இரும்பு பட்டையின் இறுதி முனையில் வெல்டிங் மூலம் இணைக்கப்பட்டது.

இக்கருவியை பயன்படுத்தி ஒரு மணி நேரத்தில் 1200 கரும்பு தாய்குருத்துகளை வெட்ட முடியும். இந்த கருவியை பயன்படுத்துவதன் மூலம் பண்ணை தொழிலாளர்களுக்கு ஏற்படும் முதுகுவலி மற்றும் பல இன்னல்களை வெகுவாக குறைக்க முடியும். மேலும் இதன் மூலம் பண்ணை

தொழிலாளர்களின் செயல் திறன் மற்றும் உற்பத்தி செலவை குறைக்க முடியும். இக்கருவியின் எடை 1.6 கி.கி என்பதால் மிக எளிதாக பெண் பண்ணை தொழிலாளர்களும் இக்கருவியை பயன்படுத்தி அதிக எண்ணிக்கையிலான கரும்பு தாய்குறுத்துகளை சிரமமின்றி வெட்டமுடியும். இக்கருவியின் விலை ரூ.1000 மட்டும். இக்கருவிக்கான காப்புரிமையை இந்தியாவின் அறிவுசார் காப்புரிமை அலுவலகம் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்திற்கு 20 ஆண்டுகளுக்கு வழங்கியுள்ளது.

**மக்கள் தொடர்பு அலுவலர்**